முச்சந்தி முரளி



"அப்ப யானைக்கும்
மொட்டுக்கும்
கையும் சேர்ந்து
முட்டுக்குடுக்கப் போகுது
எண்டு
சொல்லுங்கோ"

Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 68

வெள்ளிக்கிழமை
02 பெப்ரவரி 2024

தை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



# சு.க., ஐ.தே.க., பெரமுன மலர்கிறது புதுக் கூட்டணி

கொழும்பு, பெப்ரவரி 2

மஹிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொது ஜன பெரமுன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக்கட்சி என்பன இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான பேச்சுகளை நேற்று ஆரம்பித்துள்ளன.

11

## பொலிஸாரின் தாக்குதல் ம.உ.ஆ.வில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 2

அச்சுவேலி மற்றும் சுன்னாகம் பொலிஸாரால் இருவர் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

11

## சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

72 சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நேற்றுக்காலை முதல் நாடு தழுவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளன.

மருத்துவர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபா மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகளை தங்களுக்கும் வழங்க வேண்டுமெனக்

11

சர்வதேசத்தின் எதிர்ப்பையும் மீறி

## நிகழ்நிலைக் காப்புச்சட்டம் நேற்றுமுதல் நடைமுறை

கொழும்பு, பெப். 2

ஐ.நா. உட்பட சர்வதேச சமூகத்தால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச்சட்டம் தொடர்பில் பல்வேறு கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டபோதும் அவை எவற்றையும் கவனத்தில் எடுக்காது குறித்த சட்டத்தை சபாநாயகர் நேற்று சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய மேற்படி சட்டவரைவு 2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

11

நிகழ்நிலைச்சட்டம்

## நிறைவேறியதில் தவறேயில்லை!

மல்வத்தை பீடாதிபதி கருத்து

கொழும்பு, பெப். 2

அரசாங்கம் நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தை நிறைவேற்றியதில் எதுவித தவறுமில்லையென மல்வத்தை பீடாதிபதி சங்கைக்குரிய திபுத்துவாவே ஸ்ரீ சித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.

11

## சைக்கிளில் சென்றவர் வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 2

துவிச்சக்கரவண்டியில் சென்றவர் திடீரெனக் கீழே விழுந்து கழுத்து முறிந்து உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

42 வயதான நபரொருவர் தெல்லிப்பழையில் துவிச்சக்கர வண்டியில் சென்ற நிலையில், திடீரெனக் கீழே வீழ்ந்தார். இதனால் அவரது கழுத்து முறிந்து

11

## விபத்தில் சிக்கியவர் நேற்று உயிரிழப்பு

கிளிநொச்சி, பெப். 2

உமையாள்புரத்தில் ஹைஏஸ் - பஸ் விபத்தில் சிக்கி, அந்த வீதியால் மாடுகளை நடத்திக் கொண்டு சென்ற கோபாலசிங்கம் சதீஸ்குமார் (வயது - 25) என்பவர் படுகாயமடைந்து யாழ்.

11

## விபத்தில் காயமடைந்தவர் நிமோனியாவால் உயிரிழப்பு



கொழும்பு, பெப். 2

விபத்தில் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்றுக்காலை நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்துள்ளார்.

11

விடுதலையை வலியுறுத்தி

## முருகன், ரொபேட் பயஸ் உண்ணாவிரதப் போர்

சென்னை, பெப். 2

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன், ரொபேட் பயஸ் ஆகியோர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தமிழக முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:-

'முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்து வந்த நிலையில், ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதிமன்றத்தால் நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம்.

சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் இன்னும் சிறைக் கொட்டடியில் இருந்து விடுவிக்கப்பட

11

## காத்திருந்து காத்திருந்து கூட்டங்கள் குழம்புகின்றதே!

யாழ்ப்பாணம், பெப். 2

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் அவரால் குறித்த நேரத்தில் கூட்டங்கள் நடத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

11

## குடலில் கிருமித்தொற்று இளம்தாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

குடலில் கிருமி பரவலால் மாதகலைச் சேர்ந்த 28 வயதான இளம் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 31ஆம் திகதி குழந்தை இறந்த நிலையில் இவருக்குப் பிறந்துள்ளது. தாயாரின் உடல் நிலையும் தொடர்ச்சியாக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர்

11

## ஐஸ் போதையால் மூளைநரம்பு வெடித்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 2

உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளைப் பயன்படுத்திய இளைஞன் பரிதாபகரமாக நேற்று உயிரிழந்துள்ளான்.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரெலிக்கொம் பங்கு; சீனா, இந்தியாவுக்கு

கொழும்பு, பெப். 2

ரெலிக்கொம் நிறுவனத்தின் 53.23 சதவீத பங்குகளை இந்தியா மற்றும் சீனாவுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி இந்தியாவின் ஜியோ பிளாட்போர்ம் நிறுவனத்துக்கும் சீனாவின் கொட்யுன் இன்டர்நெஷனல் இன்வெஷ்ட்மன்ட் ஹோல்டிங் நிறுவனத்துக்குமே இந்தப் பங்குகள் பகிரப்படவுள்ளன. (ச-இ)

# ஊழலை ஒழித்தால் முதலீடுகள் குவியும்

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இலங்கை அரசுக்கு அறிவுரை





**கொழும்பு, பெப். 2**

**இலங்கையில் அந்நிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஊழல் ஒழிப்பும் வெளிப்படைத்தன்மையும் அவசியம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் முதலீடு செய்துள்ள அமெரிக்கர்கள் மற்றும் அமெரிக்காவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் ஆகியோருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நல்லாட்சி, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பையும் வழங்கும். ஆனால் இலங்கையில் கொண்டுவரப்படவுள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டம் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அரசாங்கம் ஒரு சட்டத்தை இயற்றும்போது மக்களுக்கு அதைப்பற்றி விளக்கமளிக்கவேண்டும். ஆனால், இலங்கையில் உள்ள 70 வீதமான மக்கள் நிகழ்நிலைக் காப்புச்சட்டம் தொடர்பில் போதிய தெளிவற்றவர்களாகவே இருக்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்தால் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'வற்' அதிகரிப்பானது, அன்றாட வர்த்தகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வரிச்சுமைகளை மக்கள் மீது திணித்து விட்டு பொருளாதாரத்தில் இருந்து மீட்சிய டைவது தொடர்பில் சிந்திக்காமல், நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ம-6)

## இலங்கையில் விரைவில் தேரவாத ஆய்வு மையம்

கொழும்பு, பெப். 2

தேரவாத பௌத்த ஆய்வு மையம் ஒன்றை உருவாக்கத்திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேரவாத பௌத்தத்தின் இதயமாக இலங்கை காணப்படுகிறது. பௌத்த தர்மத்தை சர்வதேச அளவில் எடுத்துச்சென்று பகிர்ந்துகொள்ள வேண்டியது இலங்கையின் கடமை. இந்த ஆய்வு மையத்தின் ஊடாக பௌத்த நாடுகளுக்கிடையே உறவுப்பாலத்தையும் கட்டியெழுப்ப முடியும். தாய்லாந்து ஒரு பௌத்த நாடு. நாங்கள் தாய்லாந்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளோம். இன்று நாங்கள் டிஜிற்றல் யுகத்தில் வாழ்ந்து வருகிறோம். அனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யவுள்ளேன். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினூடாக தேரவாத பௌத்தத்தை உலகம் முழுவதும் கொண்டுசெல்ல வேண்டும் - என்றார். (ம-6)

## டெங்குக் கட்டுப்பாடு

சாவகச்சேரி, பெப்.2

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தென்மட்டுவில் கிராம அலுவலர் பிரிவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தினர். இந்த நடவடிக்கையில் 203 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட 7 இடங்களுக்கு கால அவகாசமும், நான்கு இடங்களுக்கு சிவப்பு அறிவித்தலும் வழங்கப்பட்டன. (ப-9)

# ஆட்டம் ஆரம்பம்

கொழும்பு, பெப். 2

ஜனாதிபதித் தேர்தலுக்கான அரசியல் ஆட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெப்ரவரி மாதத்தின் இறுதிப் பகுதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளார் என்று விடயம் தெரிந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்து ஜனாதிபதி கொள்கை விளக்க உரையை ஆற்றவுள்ளார். இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான சமிக்ஞையையும் ரணில் வெளிப்படுத்தவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெப்ரவரி 8ஆம் திகதி ஜனாதிபதி வெளிநாடு செல்லவுள்ளார். இந்தப் பயணத்துக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை வெளிநாட்டுப் பயணங்களை நிறுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் உத்தேசித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

பெப்ரவரி இறுதியில் ஆரம்பமாகும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ரணிலின் ஆட்டம், ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு முழுவீச்சுடன் முன்னெடுக்கப்படும் எனவும் அறியமுடிகின்றது. (ம-44)

## சிரமதானம்



முல்லைத்தீவு, பெப். 2

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சுதந்திரதினத்தையொட்டி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலகப் பணியாளர்கள் சிரமதானப் பணிகளில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர். (ச-500)

## 80 கட்டாக்காலிகள் வவுனியாவில் பிடிப்பு

வவுனியா, பெப்.2

வவுனியா நகரசபையினால் வீதிகளில் நடமாடித் திரிந்த 80 கட்டாக்காலி மாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை பிடிக்கப்பட்டு சபையின் பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளன.

கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளுக்குரிய அடையாளத்தினை உறுதிப்படுத்திய பின் தண்டப்பணத்தினைச் செலுத்தி அவற்றை மீளப்பெற்றுச் செல்லுமாறு சபையினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 10 நாள்களுக்குள் உரிமை கோரப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சபை அறிவித்துள்ளது. வவுனியா நகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் நடமாடும் கால்நடைகளால் அதிகளவான விபத்துகள் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. (ப-110)

## யாழ்.மாவட்டத்தில் நாடகவிழா; கலைஞர்களிடம் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 2

நாடகக் கலையையும் நாடகக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில் புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் டவர் மண்டப அரங்க மன்றத்தால், யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டுவரும் தமிழ் நாடக விழா இந்த வருடமும் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் குறுநாடகம், நீண்ட நாடகம், கூத்துருவநாடகம் மற்றும் இசை நாடகம் போன்றவற்றை மேடை ஏற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. இதில் பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழகங்கள் மற்றும் தனிப்பட்ட நாடகக் குழுக்கள் விண்ணப்பிக்கமுடியும்.

அதற்கமைய நாடக எழுத்துரு (தனிக்கைச் சபையினுடைய சான்றிதழுடன்), நாடகத்தின் பெயர், நெறியாளர், இசையமைப்பாளர், ஒளியமைப்பாளர், மேடை ஒருங்கிணைப்பாளர், வேட உடை ஒப்பனையாளர், நாடகத்தின் ஒளிவடிவ இறுவெட்டு மற்றும் இதர தகவல்களுடன் கடிதம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

அனைத்து விண்ணப்பங்களும் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத்தபாலில் 'பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு - 07' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "டவர் யாழ். நாடக விழா 2024" எனக் குறிப்பிடல்வேண்டும்.

டவர் மண்டப அரங்க மன்றத்தால் நியமிக்கப்படும் தேர்வுக் குழு மூலம் நாடகங்கள் தேர்வு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சமுர்த்திச் சங்க பொதுக்கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்குரிய 2024 ஆம் ஆண்டுக்கான பொதுச் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடப்பு வருடத் தலைவர் க.குமாரவடிவேல் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், உதவிப் பிரதேச செயலர் திருமதி சதீஸ் தமிழினி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுமுறையைக் கழிக்க

# இலங்கைக்கு செல்லுங்கள்!

## இந்தியர்களுக்கு ஜெய்சங்கர் 'அட்வைஸ்'

**கொழும்பு, பெப். 2**

**இந்தியர்கள் தங்களின் விடுமுறையை இலங்கையில் கொண்டாட வேண்டும். உங்கள் அடுத்த விடுமுறையின் முதலாவது தெரிவாக இலங்கை இருக்கட்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், மும்பையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் தெரிவித்துள்ளார்.**

இந்தியர்களின் முதல் தெரிவான சுற்றுலாத்தளமாக மாலைதீவே காணப்படுகின்றது. மாலைதீவின் வருடாந்தச் சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் இந்தியர்களே. ஆனால் தற்போது மாலைதீவின் அதிபராக இருக்கும் மொகமட் மொய்சு இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டையும் சீன ஆதரவுத் தளத்தையும் கொண்டவர். இதனால் இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையில் அண்மைக்காலமாக தூதரக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக இந்தியா மாலைதீவுக்குச் சுற்றுலா செல்லும் இந்தியர்களை லட்சதீவு மற்றும் இலங்கைக்குச் செல்லுமாறு அண்மைக் காலமாக ஊக்குவித்து வருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தியர்கள் இலங்கைக்குச் சுற்றுலா செல்ல வேண்டும் என்று ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

"இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த வேளையில் மக்கள் உணவுக்கும் எரிபொருளுக்கும் கிலோ மீற்றர் தூரத்துக்கு வரிசையில் நின்றதை நான் நேரில் பார்த்தேன். அப்போது இந்தியாதான் இலங்கைக்கு 4.5 பில்லியன் டொலரை உதவியாக வழங்கியது. சர்வதேச நாணய நிதியம் வழங்கியதைவிட 50 வீதத்தை அதிகமாக இந்தியா வழங்கியது. "- என்று ஜெய்சங்கர் மேலும் தெரிவித்தார்.

(ம-6)

## விடுதியில் இருந்தவர் மர்மச் சாவு!

கொழும்பு, பெப். 2

காலி வீதி, வேவல பகுதியில் உள்ள விடுதியில் தங்கியிருந்த நபரொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். விடுதியின் குளியலறையில் இரத்தக் காயங்களுடன் அந்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். களனிப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)



இராஜாங்க அமைச்சரானார் ஷசீந்திர


கொழும்பு, பெப். 2

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக ஷசீந்திர ராஜபக்ச ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். (ம)

## புதிய மின் இணைப்புக்காக தவணை முறையில் பணம்!

புதிய மின் இணைப்புகளுக்கு ஒரே நேரத்தில் பணம் செலுத்தமுடியாத விண்ணப்பதாரர்களுக்குத் தவணை முறையில் பணம் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சாரசபைக்கு மின்சக்தி அமைச்சரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வருட மின் உற்பத்தித் திட்டம், அட்டவணை, சேவைச் செலவுகள், மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளின் அளவு தொடர்பிலும் தகவல்களை வழங்குமாறு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-6)



## சுதந்திரதினத்தன்று மதுபானசாலை பூட்டு

சுதந்திரதினத்தை முன்னிட்டு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் பூட்டப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

# ஜனாதிபதித் தேர்தல்; உடன் முடிவெடுக்குக

## பெரமுனவுக்குள் வலுக்கும் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி நிலைப்பாட்டை மக்கள் கேட்கின்றனர், எனவே, அது தொடர்பில் விரைவில் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை எடுக்குமாறு பொதுஜன பெரமுனவின் தலைமைப்பீடத்திடம் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை பெயரிட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) அநுரகுமார திஸாநாயக்கவை களமிறக்கவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி ரணிலை களமிறக்குவது என்று தீர்மானித்துள்ளது. ஆனால், ஆளுங்கட்சியான பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே, வேட்பாளர் யார்? கூட்டணிக் கட்சிகள் எவை? பொதுவேட்பாளரைத்தான் இம்முறை பெரமுன ஆதரிக்கப்போகின்றதா? என்பது தொடர்பான விடயங்களில் தெளிவுபடுத்தல்களை வழங்குமாறு பொதுஜன பெரமுனவின் தலைமைப்பீடத்திடம் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-44)



# பட்சி தினம் தெரியுமோ?

**சா**ட்டில்லாமல் சாவில்லை எண்டுவினம். ஆனால் இப்ப என்னெண்டால் சாகிறதுக்காகவே சாட்டுகளைத் தேடுற காலமாப் போட்டுது. அதுவும் சின்னம் சிறுசுகள், குஞ்சுகுருமன்கள் எல்லாம் ஏதோ வாழ்ந்தனுபவிச்சதுகள் மாதிரி, எந்தப் பிரச்சினைக்கும் சாகிறதுதான் முடிவெண்ட நினைப்பில திரியுதுகள்.

கிட்டடியில இப்பிடித்தான் ஒரு பதினைஞ்சு வயசுப் பெடியன், தூக்கில தொங்கிச் செத்துப் போட்டான். என்னத்துக்கு அந்தப் பிள்ளை இப்பிடியொரு வேலை செய்தது எண்டு எல்லாருக்கும் ஒரே கவலை. இத்தனைக்கும் அந்தப் பெடியன் குழப்படியும் இல்லை. அம்மா, அப்பாவின்ர சொல்லுக்கேட்டு வளர்ந்த பிள்ளைதான். ஆனால் இப்பிடியொரு முடிவுக்கு அந்தப் பிள்ளை ஏன் வந்தது எண்டு அறிஞ்சால், இதுக்குப் போய் இப்பிடிச் செய்யிறதோ எண்டு நினைப்பியள்.

இப்ப பள்ளிக்கூட லீவுதானே. அதால பெடியன் தலைமயிர் வெட்டுறதுக்காக சலூனுக்குப் போயிருக்கிறான். பள்ளிக்கூடம், ரியூசன்களில கண்டபடி தலைமயிர் வெட்டிக்கொண்டு போனால், திருப்பி வீட்டை அனுப்பிப் போடுவினம். அதால சலூன்காரரே சின்னப்பெடியளுக்கு ஸ்ரைலா தலைமயிர் வெட்டி விடுறேலை. அப்பிடியும் வெட்டினால் தாய், தகப்பன் மட்டுமில்லாமல் ரியூசன்காரர், பள்ளிக்கூடக்காரர் கூட சலூனுக்குப் போய் அவைக்கு அட்வைஸ் பண்ணின சம்பவங்களும் இருக்கு. அதால எதுக்குச் சோலி எண்டிட்டு அவை பள்ளிக்கூடத்துக்கு ஏத்தமாதிரித்தான் தலைமயிரைச் சின்னப்பிள்ளையளுக்கு வெட்டிவிடுறவை. இப்பிடிப்பட்ட நிலையில அந்தப் பெடியனுக்கும் தகப்பன் சொன்னமாதிரி, தலைமயிரை சலூன்காரர் வெட்டியிருக்கிறார். ஆனால் அது பெடியனுக்குப் பிடிக்கேலைப் போல. பள்ளிக்கூட லீவு நாளிலையாவது தனக்குப் பிடிச்ச ஸ்ரைலில தலைமயிரை வெட்ட அவன் நினைச்சானோ,என்னவோ. சலூனிலையே அவன் ஒண்டும் சொல்லாமல் அழத்தொடங்கிட்டான். அதுக்குப் பிறகுதான் வீட்ட வந்து, இப்பிடியொரு வேலையைச் செய்து அந்தப் பிள்ளை உயிரை விட்டிட்டுது.

இப்பிடியொரு சின்னவிசயத்துக்கே சாகிற முடிவெடுக்கிறது, எங்கட சின்னப்பிள்ளையளிட்ட இப்ப எப்பிடிப்பட்ட பலவீனமான மனநிலை இருக்கெண்டதைத்தான் காட்டுது. போன்ல பாக்கிற படங்கள், வீடியோ கேமில வாற வன்முறையள் எண்டதுகளால எல்லாத்துக்கும் சாகிறதுதான் முடிவெண்டது சில பிள்ளையளுக்கு மனதில பதிஞ்சிட்டுது. ஆனால் பிள்ளையள் இப்பிடி நொய்ஞ்ச மனமுள்ளதுகளா மாறாமல் பாக்கிறது பெற்றாரின்ர கடமை. பிள்ளையளின்ர சின்னச் சின்ன ஆசையளுக்குக் கூட இடம் குடுக்காமல் அடிதடி எண்டு வெருட்டி, உருட்டி அதுகளின்ர மனதை உடைக்கக்கூடாது. அப்பிடி சின்னப்பிள்ளையள் செய்யிறது பிழை எண்டா, அதைப் பக்குவமா இருந்து சொல்லிக்குடுக்கவேணுமே தவிர, ஏதோ கொலைக்குற்றம் செய்தமாதிரி அதுகளை எடுத்த எடுப்பிலேயே அடிச்சு நொருக்கவும் கூடாது. பெற்றார் பிள்ளையளுக்கு எப்பவும் ஆதரவா இருந்தால், பிள்ளையள் தடம் மாறவும் மாட்டினம்.இப்பிடி பிழையான முடிவுகளை எடுக்கவும் நினைக்காயினம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூத்தகுடியான தமிழினத்தின் பெருமையைச் சான்றுபகருக!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 2**

**'கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் முன் தோன்றிய மூத்தகுடி' எனப் பெருமை கொள்ளுகின்ற இனம் எமது தமிழினம். எங்களுடைய பண்பாட்டு விழுமியங்களை அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்வதற்கான பாலமாக நாம் விளங்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு மனிதக்குழுவும் தமக்கென சில தனித்துவமான மரபுகளையும், கட்டமைப்புகளையும் கொண்டிருக்கக் காண்கிறோம். அவை அந்த மக்களின் தொடர்ச்சியான இருப்புக்கும், வரலாற்றுத் தொடர்ச்சிக்கும் அடித்தளம் இடுகின்றன, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த குடி எமது தமிழினம். அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் தமிழ்சொற்கள் இன்றும் வழக்கில் உள்ளன. இதனை அண்மைய அகழ்வாராய்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. அந்தவகையில் நாம் எமது பண்பாட்டு விழுமியங்களைப்பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததிகளிடையே அதனை வாழவைக்கவேண்டும் - என்றார். (ச-125)

# அறுவடைக் கட்டனத்தை நிர்ணயம் செய்யுங்கள்

## நெற்செய்கையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 2

பெரும்போக அறுவடைப் பணிகளுக்கு அறுவடை இயந்திர உரிமையாளர்கள் மாறுபட்ட வகையில் இயந்திரக் கட்டணங்களை அறவிடுகின்றனர் என நெற்செய்கையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அறுவடைப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இயந்திர உரிமையாளர்கள் மாறுபட்ட விதத்தில் இடத்துக்கு இடம் கட்டணத்தை அறவிடுகின்றனர். எரிபொருள், உதிரிப்பாகங்கள் என்பவற்றின் விலையுயர்வைக் காரணம்காட்டி, பரப்புக்கு 900 ரூபா தொடக்கம் ஆயிரத்து 200 ரூபா வரை கட்டணம் அறவிடப்படுகிறது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் விவசாய சம்மேளனங்கள் நியாயமான கட்டணமொன்றை நிர்ணயித்து அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-17)



# இப்படி வீதியிருந்தால் எப்படிப் பயணிப்பது?

**கிளிநொச்சி, பெப்.2**

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் கடற்கரைக்குச் செல்லும் பிரதான வீதி மற்றும் உள்ளகவீதிகள் அனைத்தும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது பெய்த கடும் மழை காரணமாகவும், தொடர்ச்சியாக நடைபெற்று வரும் சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாகவும் வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் அவசரதேவை கருதி அம்புலன்ஸ், பேருந்து சேவைகள் இடம்பெற முடியாத நிலைமையும் மீனவத் தொழிலாளர்கள் மற்றும் மீன் வியாபாரத்துக்குச் செல்பவர்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப்பகுதியை நேரில் வந்து பார்வையிட்டு உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-113)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப். 2

வட்டுக்கோட்டை உடுக்கியவளை திருக்கோயிலில் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சங்காபிஷேக பூசைகள் ஆரம்பமாகி சங்காபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து பஞ்சமுக விநாயகருக்கு திருவூஞ்சல் பாடல் இசைக்கப்பட்டு சுவாமி திருவீதியுலா வருவார் என்று ஆலய தர்மகத்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ச)

# இரத்ததானம்

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாணம் சிறைச்சாலையினரால் இரத்ததான முகாமொன்று, சிறைச்சாலை ஒன்றுகூடல் மண்டபத்தில், நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை இடம்பெறவுள்ளது. (ப-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் புது உத்தியைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**மிதுனம்:** தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும்.

**கடகம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்துப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகையை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறைவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**துலாம்:** அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். முன்னேறும் நாள்.

**விருச்சிகம்:** உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம்விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மகரம்:** உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மீனம்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# பரசூட்டிலிருந்து வீழ்ந்த 4 வீரர்கள் காயம்!

கொழும்பு, பெப். 2

சுதந்திரதினக் கொண்டாட்ட ஒத்திகையின்போது பரசூட்டிலிருந்து வீழ்ந்த விமானப்படையினர் நால்வர் காயமுற்றுள்ளனர். எனினும் அவர்கள் தற்போது குணமடைந்து வருகின்றனர் என்று விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச தெரிவித்தார். 76ஆவது சுதந்திர தின நிகழ்வு குறித்து அறிவிப்பதற்காக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒளியும் இருளும் இணைந்தாற்போல்!

இலங்கைக்கும் மாலைதீவுகளுக்கும் இடையில் அம்புலன்ஸ் விமான சேவைகளை நடத்துவதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. மாலைதீவு விமான சேவைகள் போக்குவரத்து அமைச்சருக்கும் இலங்கை விமான சேவைகள் அமைச்சருக்கும் இடையில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளின் அடிப்படையி லேயே இந்த உடன்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. வெளிப்பார்வைக்கு வேண்டுமானால், இந்த விடயம் இரு நாடுகளுக்கும் இடையிலான மருத்துவப் பேருதவி தொடர்பானதாகவோ அல்லது விமானப்பறப்புடன் தொடர்புடையதாகவோ இருக்கலாம். ஆழ்ந்து சிந்தித் தால் இந்த ஒப்பந்தத்தின் பின்னுள்ள ஆபத்தம் சங்களும் - அதேநேரம் 'இலங்கை ஒரு அணிசேரா நாடு' என்று திரும்பத்திரும்ப வலியுறுத்திவரும் ஜனாதிபதி ரணிலின் இராஜதந்திர வெற்றியும் அப்பட்டமாகப் புலப்படும்.


மாலைதீவின் ஜனாதிபதியாக மொகமட் மொய்சு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இவர் சீனாவின் தீவிர ஆதரவாளர். சீனாவின் ஆதரவாளராக மட்டுமல் லாமல், இந்தியாவின் எதிர்ப்பாளராகவும் அவர் பல இடங்களில் தன்னைப் பதிவுசெய்து வருகின்றார். பிராந்தியத்தில் இந்தியாவைப் பலமிழக்கச் செய்யும் சீனாவின் கரங்களைப் பலப்படுத்துவது மொய்சுவின் பிரதான நடவடிச்கையாக அமைந்துள்ளது. இதனால் மாலைதீவைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் இந்தியா தீவிரமாக இறங்கியிருக்கின்றது. மாலைதீவும் இந்தி யாவில் தங்கியிருந்த விடயங்களில் மாற்று நிலைப் பாடுகளை விரைவாக எடுத்து வருகின்றது. இதுவரை அம்புலன்ஸ் விமான சேவைகளை இந்தியாவே மாலை தீவுக்கு வழங்கி வந்தது. ஆதலால், இனிவரும் காலத் தைக் கருத்திற்கொண்டு அந்தச் சேவையிலிருந்து இந்தி யாவைத் தவிர்த்துவிட்டு இலங்கையை நாடியிருக்கின் றது மாலைதீவு.

இலங்கைக்கு தென்மேற்காக அமைவு பெற்றிருக் கும் மாலைதீவிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் சமநேரத்தில் அல்லது அதற்கும் குறைவான நேரத்தில் இலங்கைக்கு வந்துவிடலாம். சீனாவுக்குச் செல்ல வேண்டு மாயின் அது தொலைதூரப் பயணம். இந்தச் செயல் நோயாளிகளின் உயிருடன் விளையாடும் செயலாகவே அமையும். ஆதலால் கேந்திர முக்கியத்துவம் கருதிய இந்த ஒப்பந்தத்தைத் தனது வாய்ப்பாகவும் இலங்கை இறுகப்பற்றியிருக்கின்றது. இந்த இருதரப்பு ஒப்பந்தத் தால் இலங்கைமீது இந்தியா கோபம் கொள்ளுமே? என்ற தார்மீகச் சந்தேகம் எழலாம். ஆனால், இலங்கை யின் குறிப்பாக ரணிலின் 'அணிசேராக் கொள்கையை' இந்தியா நம்புகின்றது என்பதை இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, 'சுற்றுலாவுக்குச் செல்லும் இந்தியர்கள் இலங் கைக்குச் செல்வதைத் தங்கள் முதன்மைத் தெரிவாகக் கொண்டிருக்கவேண்டும்' என்று இந்தியாவில் நடை பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அறிவுறுத்தியுள்ளார்.

ஆக, பிராந்தியத்திலும் சரி சர்வதேசத்திலும் சரி இலங்கை ஓர் அணிசேரா நாடு என்ற கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகக்கூட இதைக் கொள்ளலாம். 'அங்கீகரித்தல்' 'ஏற்றுக்கொள்ளல்' இவையிரண்டும் மிக மிக முக்கியமான விடயங்கள். ரணிலின் ராஜதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தையும், அவருக்கு இருக்கும்சர்வதேசப்பிணைப்பைஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்தனத்தையும் இந்தியா - மாலைதீவுகள் - சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான அண்மைக்கால மோதல் கள் காலக்கண்ணாடியாக உணர்த்தியிருக்கின்றன.

இங்கு துயரமான விடயம் என்னவென்றால், இப்படிப்பட்ட அரசியல் சதிராட்டங்களைக் கடந்து- ரணிலின் ராஜதந்திர நகர்வுக்கு அப்பாற்பட்டு, எவ்வாறு தனக்குரிய நீதியை ஈழத்தமிழினம் வென்றெடுக்கும் என்பதே. பிராந்தியத்தில் இலங்கை இன்று கொண் டிருக்கும் தவிர்க்க முடியாத்தனம், ஈழத்தமிழர்களின் நீதிக் கான பயணத்தில் ஓர் இருட்டுப்பாதை. செல்லும் வழியில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏதேனும் வெளிச்சங்கள் ஏற்பட்டாலேயே எமக்கான நீதி இங்கு சாத்தியம்.






# மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க கிராமங்களுக்குச் செல்லும் ஆளுநர்!

### முன்மாதிரியான நடவடிக்கை ஆரம்பம்



**யாழ்ப்பாணம், பெப். 2**

**மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர் பில் கேட்டறிய கிராமங்களுக்கே நேரில் சென்று ஆராயும் முன் மாதிரியான நடவடிக் கையை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆரம்பித்துள்ளார்.**

மக்களுடனான முதலாவது சிநேகபூர்வ சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை அரி யாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் நடைபெற்றது.
இதன்போது கிராமங்க ளுக்கான அபிவிருத்திப் பணிகள் மற்றும் தொழில் இன்மை, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையா தல், பாடசாலை இடைவில கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் மக்கள் சுட்டிக் காட்டினர். மக்களின் கோரிக் கைகளை கேட்டறிந்த ஆளு நர், உள்ளூராட்சி மன்றங்க ளூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை துரிதப்படுத் துமாறு அதிகாரிகளுக்கு அறி வுறுத்தினார். (ச-27)

## பயணத்தடை நீக்கம்

கொழும்பு, பெப். 2
நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தனது கலா நிதிப் பட்டப்படிப்புக்காக சீனா வுக்குச் செல்ல கொழும்பு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கி யுள்ளது.
2000 ஆம் ஆண்டில் இடம் பெற்றதாகக் கூறப்படும் 20 மில்லியன் ரூபா பண மோசடி யில் கம்மன்பிலவுக்குத் தொடர் பிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட தையடுத்து அவருக்குப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது. (ம)

## 'உரித்து' செயற்றிட்டத்தால் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு

கொழும்பு, பெப். 2
முறையான காணி உரிமையின்றி நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக 'உரித்து' வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்க அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது.
இந்த வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 10 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. (ச-26)

## போதை மாத்திரை: ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 2
போதைமாத்திரைகளை உடைமை யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர், அல் லைப்பிட்டியில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார். அவர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடமிருந்து 40 போதை மாத்தி ரைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-125)



## 27% பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்!

நாட்டில் கடந்த வருடத்தில் 39ஆயிரத்து 115 புற்று நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் நான்கில் ஒரு பங்கான பெண்கள் மார் பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடந்த வருடம் அடையாளம் காணப்பட்ட தரவுகளுக் கமைய நாளாந்தம் 103 புற்றுநோயாளர்கள் அடை யாளம் காணப்படுகின்றனர். நாளொன்றுக்கு புற்று நோயால் 42பேர் உயிரிழக்கின்றனர். ஆண்கள் மத்தியில் 13 வீதம் வாய்ப்புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

**நாளை**

03.02.2024
**சனிக்கிழமை**
**தை – 20**
சுபநேரம் : 03.35 - 5.05
ராகுகாலம் : 09.35 - 11.05

**நாளொரு நல்வார்த்தை**

**சமாதானமே சிறந்த மற்றும் மலிவான வழக்கறிஞர்.**
**– ரொபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபத்துகளைத் தடுக்க ஒன்றிணையுங்கள்!

## அருட்தந்தை றமேஸ் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.2

வடமாகாணத்தில் இடம்பெற்றுவரும் வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு அனைவரும் அணி திரள வேண்டும் என சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் வடமாகாணப் பணிப்பாளர் அருட்தந்தை யா. றமேஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'வீதி விபத்துகளைத் தவிர்ப்போம்' எனும் தொனிப்பொருளிலான வட மாகாண செயற்றிட்டம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வட மாகாண வீதிகளிலே ஏற்படுகின்ற விபத்துகளால் ஏற்படுகின்ற உயிரிழப்புகள், காயப்படுகின்ற மக்களின் எண்ணிக்கை என்பன அதிகரித்தபடியேயுள்ளன.

இலங்கையில் நாளொன்றுக்கு அண்ணளவாக ஏழு தொடக்கம் எட்டு பேர் விபத்தில் இறக்கின்றனர். இது ஒரு பேரவலம். ஆனால் நாம் அனைவரும் மௌனமாக இருக்கின்றோம். நாம் இன்று முதல் வீதிகளிலும் பஸ் நிலையங்களிலும் மக்கள் செறிவாக நடமாடும் இடங்களிலும் இத்தகைய விழிப்புணர்வு கருத்துகளையும் துண்டுப்பிரசுரங்களையும் இன்னும் அதையொட்டிய விடயங்களையும் மேற்கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

இது எங்களுடைய தனிப்பட்ட ஒரு பணி அல்ல. அனைத்துத் தரப்பினரும் குறிப்பாக மக்கள் பிரதிநிதிகளும் கைகோர்க்க வேண்டும். இதன் ஊடாக விபத்துகளால் ஏற்படுகின்ற உயிரிழப்புகளை கட்டுப்படுத்த முடியும்- என்றார். (ப-13-66)

## சிவராத்திரி முன்னாயத்தம்; கேதீஸ்வரத்தில் கூட்டம்!

மன்னார், பெப்.2

மன்னார், திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் மகாசிவராத்திரி விழா தொடர்பாக முன்னாயத்தக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட செயலக பழைய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிவராத்திரியை முன்னிட்டு ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டன. (ப-13)

## பேருந்து சேவை வேண்டும்

கிளிநொச்சி, பெப்.02

கிளிநொச்சி, கிருஷ்ணபுரம் கிராமத்துக்குப் பேருந்து சேவையை நடத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் கிளிநொச்சி நகரிலிருந்து ஆரம்பிக்க வேண்டிய பேருந்துச்சேவை சேவியர் கடைச் சந்தி, விநாயகர்புரம், ஆனந்தநகர், கிருஷ்ணபுரம் கிராமங்களைச் சென்றடைந்து இரணைமடுச் சந்தி வழியாக மீண்டும் கிளிநொச்சி நகரை சென்றடையக் கூடியவாறு பேருந்து சேவை அமைய வேண்டும் என அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)

## தாமே வீதியைச் சீரமைக்க பொன்னாவெளி மக்கள் முடிவு

பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியத்தின் ஒழுங்குபடுத்தலில் பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து வேரவில் வரையான வீதியிலுள்ள குழிகளை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மழையால் வீதியில் பல இடங்களில் குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனை மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே பொன்னாவெளி, கிராஞ்சி, வலைப்பாடு, பாலாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே தற்காலிக புனரமைப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். (ப-13)

## கைது!

அனலைதீவில் 20 சாராயப் போத்தல்களுடன் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் இறங்குதுறையில் இருந்து அளவுக்கதிகமான மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் பயணிக்கின்றார் என்று ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்திய போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ம-125)

## களத்தரிசிப்பு

அச்சுவேலி மேற்கு, ஜே/287 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் கோப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் அண்மையில் டெங்கு களத்தரிசிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ப-66)





## ஆளப்போகும் வேர்கள்

கோப்பாய், பெப்.02

எழுத்தாளர் வடகோவை வரதராஜன் எழுதிய 'ஆளப்போகும் வேர்கள்' எனும் நூலின் வெளியீட்டு நிகழ்வு, ஓய்வுநிலை மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவபாதம் சிவகுமார் தலைமையில் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. (ப-66)



## வீட்டினுள் நுழைந்து நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 2

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்துள்ளது.

வீட்டிலுள்ளோர் உறக்கத்திலிருந்ததைச் சாதகமாக்கி திருடர்கள் இந்தக் கைவரிசையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டுக்கமைய கோப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-17)

## சுதந்திரதின விழா ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பு, பெப்.2

நாட்டின் 76 ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வை கொண்டாடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன என்று பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். 'புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் 76ஆவது தேசிய சுதந்திர தினம் காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 18 இந்திய மீனவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

மன்னார், பெப். 2

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை மன்னார் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விதித்தது.

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்குள் அவர்கள் இதே குற்றத்தை மீண்டும் புரிந்தால், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை உடன் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மன்னார் கடற்பரப்புக்கு அண்மித்த பகுதியில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்கள் கடந்த 16ஆம் திகதி இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1946



மறைவு 01 . 02 . 2024

## அந்தோணிப்பிள்ளை றெஜினா (இரத்தினம்)

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோணிப்பிள்ளை றெஜினா (இரத்தினம்) அவர்கள் நேற்று (01.02.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுமுத்து ஞானம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும், ஞானப்பிரகாசம் அக்னேஸ் தம்பதிகளின் அன்பு மருமகளும், அந்தோணிப்பிள்ளையின் (கைலாயம்) அன்பு மனைவியும், கஜேந்திரன் (இந்தியா), புளோரன்ஸ் (சுவிஸ்), மேரி, கில்டா (கனடா) மற்றும் காலஞ்சென்றவரான லூட் ரெணிக்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவி, ஆனந்தராசா (சுவிஸ்), நாதன் (பிரான்ஸ்), ஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அன்ரனி ஜேம்ஸ், யசோதா, ரூபா, சங்கர், ஸ்ரெவி, விஜிதரன், லூட் ரெனிக்சன், ஜெனிசிகா, டிலக்சன், டினுசன், டியான்சன், யாக்சன், யதுசன் மற்றும் காலஞ்சென்ற ஜெனிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், இந்து, ராவணன், பிருந்தா, விபி அக்ஸ் எல் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.02.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, நீர்வேலி புனித பரலோக மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக புனித பரலோக மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 881 9660

(CS 28021) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1946



மறைவு 31 . 01 . 2024

## திருமதி லியோனி நவமலர் பாலரட்ணம்

ஏழாலை தெற்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும் அலுக்கை அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லியோனி நவமலர் பாலரட்ணம் கடந்த (31.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பாலரட்ணத்தின் அன்பு மனைவியும், டொறீன் வனிதா (ஆசிரியர் - யூனியன் கல்லூரி), எல்றோய் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோசெவ் இதயராஜ் (பிரதேச சபை - வலி மேற்கு), மடோனா (தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றெமி, ஷெறோன் கபிரியோ, எலோஜின் எல்விஜ், மடோன் மரியோ ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை ஐயாத்துரை, அன்னம்மாள் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஞானப் பிரகாசம் பத்திநாதர், மரியம்மா தம்பதியரின் மருமகளும், பெஞ்சமின் இராசநாயகம் (அமரர்), றீற்றா அருள்நாயகி, இமல்டா தவமணிதேவி, அஞ்சலினா தவராசா (அமரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயரட்ணம் (அமரர்), ஞானரட்ணம், தேவரட்ணம், யோகரட்ணம், ஜீவரட்ணம், அருட்சகோதரி புளோறினா நேசரட்ணம் (அமரர்), நவரட்ணம், குணரட்ணம், தவரட்ணம், தனரட்ணம், அருட்பணி. P.J. ஜெயரட்ணம் (குருமுதல்வர் - யாழ்ப்பாணம்), விமலரட்ணம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (03.02.2024) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அளவெட்டி புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அளவெட்டி சூசையப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 639 1565

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28020) A-1

# மரண அறிவித்தல்



மண்ணில் 31.07.1951

விண்ணில் 30.01.2024

## தம்பித்துரை தம்பிராசா

(ஓய்வுபெற்ற மாநகரசபை சாரதி)

கைதடி மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை தம்பிராசா அவர்கள் கடந்த (30.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை சின்னப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்க ளான சங்கரப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், தனுசியா (கனடா), கருணீகன் (லண்டன்), கார்த்திகா (கனடா), கவனீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாகரனின் (கனடா) அன்பு மாமனாரும், கவிஸ்சன், அஸ்வின் (கனடா), ஆதீரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, செல்வராசா (சுவிஸ்), மாணிக்க வாசகர் (ஜேர்மன்), இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசமணி மற்றும் இராசபூமணி, சபாரத்தினம் (கனடா), நவரத்தினராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 8549 360

(CS 28019) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு அழைத்தால் பரிசீலிப்பேன்

## நிஷாந்தவின் மனைவி

அரசியலில் பிரவேசிக்கும் நோக்கம் தற்போதில்லை. ஆனால் தனது கணவரின் மறைவால் வெற்றிடமாகியுள்ள பதவியை ஏற்கவேண்டும் என்று புத்தளம் மக்களும், கட்சியும் கோரிக்கை விடுத்தால் எதிர்காலத்தில் அது தொடர்பாகப் பரிசீலிக்கலாம் என்று மறைந்த சனந் நிஷாந்தவின் மனைவி தெரிவித்துள்ளார்.

எனது கணவர் புத்தளம் மாவட்டத்துக்கும், மக்களுக்கும் பெரும் சேவை யாற்றியுள்ளார். அவரைத் தேடி வந்த எவரும் வெறுங்கையுடன் திரும்பிய தில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# 31 ஆவது நாள் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாணம், வடுக்கோட்டை பொன்னாலையில் கப்டன் விஜயகாந்த்தின் 31 ஆவது நாள் நினைவேந்தல் கடந்த செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. (பு-27)

# கலந்துரையாடல்

வேரவில் பிரதேச மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் சேவையில்லாதது தொடர்பாக மருத்துவமனை அபிவிருத்திக் குழுக் கலந்துரையாடல் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் இசுறு தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் மருத்துவமனையின் அம்புலன்ஸ் திருத்தத்துக்காகவும், இன்னொரு வாகனமும் கிளிநொச்சியில் நிற்கின்றது எனவும் அம்புலன்ஸ் பயணிக்க முடியாத நிலையில் வீதி காணப்படுவதால் வீதியைப் புனரமைப்பதன் மூலம் அம்புலன்ஸினை சேவையில் ஈடுபடுத்தமுடியும் எனவும் பொறுப்பு மருத்துவர் தெரிவித்துள்ளார்.

வேரவில் மருத்துவமனையில் காணப்படுகின்ற இன்னொரு வாகனம் வீதியில் பயணிக்கக் கூடியது. அதனை விரைவாகப் பணியில் ஈடுபடுத்துமாறு கலந்துரையாடலில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (பு-13)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 2

கிரியாயோக தியானமும் அதுபற்றிய இதர சொற்பொழிவுகளும் யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 9.30 மணிதொடக்கம் மு.ப. 10.30 மணி வரையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இன்றைய நெருக்கடியான சூழலில் தியானம் மற்றும் ஆன்மீகம் மனித வாழ்க்கையில் எவ்வகையான மாற்றங்களைக் கொண்டு வருகின்றன என்பது பற்றி பரமஹம்ஸ யோகானந்தரின் சீடர்கள் விளக்கவுள்ளனர். ஆர்வமுள்ளவர்களைப் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)

# கதிரைச் சின்னத்தில் அரசியல் கூட்டணி!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்தின் கீழ் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தைப் பெறுவதில் மைத்திரி தரப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்ட திலங்க சுமதிபால மைத்திரி தரப்புடன் முரண்பட்டுள்ளார். தயாசிறி ஜயசேகரவும் மைத்திரி தரப்புடன் அரசியல் சமரில் ஈடுபட்டு வருகின்றார். இந்தநிலையில் கதிரைச் சின்னத்துக்குப் புத்துயிர் கொடுப்பதற்கும் புதிய கூட்டணியின் தலைமைப் பதவியை சந்திரிகாவுக்கு வழங்குவதற்கும் பேச்சுகள் இடம் பெற்றுவருகின்றன என்று கூறப்படுகின்றது. (பு-44)

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்ய ஆண் வேலையாள் தேவை.

தொடர்பு: 077 815 3300

(cs.53797) (N-1)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.09.1947 | 29.01.2024 |



## இலங்கைநாதன் இராசமலர்

(கிளியக்கா)

மலேசியாவை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைநாதன் இராசமலர் கடந்த 29.01.2024 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமநாதன் பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும், இலங்கைநாதனின் அன்பு மனைவியும், ஜெயப்பிரியா, ஜெயமோகன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும், தயானந்தன் (ஜெயப்பிரியா நகைமாடம் யாழ்ப்பாணம்), சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான காசிநாதன், சரஸ்வதி, சொக்கநாதன், இராசசிரோன்மணி, நடராசா ஆகியோரின் அன்பு சகோதரியும், சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், மகாலக்சுமி ஆகியோரின் மைத்துனியும், கமலேஷ், துவாரகன், கேதாரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2024) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 194 9960

(cs.29338) V-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
## உப அலுவலகம், கோப்பாய்.
## ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02. தியாவத்தை ஒழுங்கையில். 48 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம். சொந்தக்காரர் மார்க்கண்டு நடராசாவும் ஏனையோரும் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியை யாழ்ப்பாணம். கோப்பாய் வடக்கு. சோனெழு. சுப்பிரமணியம் கோதண்டபாணி (441393695 V) பெண் அமுதமணி என்பவர்கள். பிரசித்த நொத்தாரிசு எஸ்.கஜேந்திரகுமார் மூலம் 2020.01.21 ஆம் திகதி 3807 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம். கோப்பாய் வடக்கு. கோப்பாய் பெரியாட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த துரைராசா நந்தரூபன் (692074432 V) என்பவரிற்கு ஒப்படைத்துள்ளார்கள்.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியில் பிரசித்த நொத்தாரிசு சி.ஆறுமுகம் அவர்களால் வரையப்பட்ட 15219/1940.09.13 ஆம் இலக்க உறுதியை தாயுறுதியாக கொண்டே. பிரசித்த நொத்தாரிசு திருமதி எஸ்.கஜேந்திரகுமார் அவர்களால் வரையப்பட்ட 3768/2019.12.25 ஆம் இலக்க பிரகடன உறுதி மூலம் சுப்பிரமணியம் கோதண்டபாணி என்பவர். தனது மாதாவின் சீதனமும் ஆட்சியுமெனவும் ஏகவாரிசான தன்னை மாதாவழி முதுசமாக வந்தடைந்தது எனவும் பிரகடனப்படுத்தி சொந்தக்காரரானார்.

அத்துடன் குறித்த ஆதனத்தின் நிலப்பரப்பு 93/4 இல் சொரியலாக 1/6 பங்கே வந்தடைந்துள்ளதோடு உறுதியில் நிலப்பரப்பு 2 என குறிப்பிடப்பட்டு. தெற்கு மீதியாதனம் என காட்டப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் கிழக்குப்பகுதி. கோப்பாய் கோவிற்பற்று. கோப்பாய் வடக்கு இறை. உள்ளூராட்சி அதிகாரசபை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலர் பிரிவு. வலிகாமம் கிழக்கு கிராமசேவகர் பிரிவு J/262 "இலகடி" நிலப்பரப்பு இரண்டும். பயிர் வகைகளும் இது 2019.12.28 ஆம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.எஸ் பாலேந்திரன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2019/1021 ஆம் இலக்கப்படத்தில் 1 ம் இலக்கத்துண்டாக சுட்டப்பட்டுள்ளது.

**இவ்வாதனத்திற்கான எல்லைகள்**

கிழக்கு : திருஞானசம்பந்தன் சரவணபவனின் ஆதனம்
வடக்கு : றோட்டு
மேற்கு : றோட்டு
தெற்கு : 1ம் பெயருக்குரியவாதனம் இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளனைத்தும்

தற்போது இவ்வாதனத்தை துரைராசா நந்தரூபன். தனது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறும். யாரேனும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது துரைராசா நந்தரூபன் என்னும் பெயரிற்கு. பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(cs.29332) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதேச்சதிகாரக் கருத்துகளால் சர்வதேசத்தைப் பகைக்காதீர்!

## அமைச்சர் அலஸுக்கு 'அட்வைஸ்'



கொழும்பு, பெப். 2

இலங்கையென்பது ஜனநாயக நாடாகும், எனவே எதேச்சதிகாரமாகக் கருத்துகளை வெளியிட்டு சர்வதேசத்தைப் பகைத்துக்கொள்ளும் வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் செயற்படக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐ.நா. அல்ல யார் சொன்னாலும் நாம் செய்வோம் (யுக்திய) என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இது ஏற்புடைய அறிவிப்பல்ல. இலங்கையானது சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. சமவாயங்களை பின்பற்றி நடக்க வேண்டியுள்ளது. இது எதேச்சாதிகார நாடு அல்ல, எனவே, ஜனநாயக வழியில்தான் பயணிக்க வேண்டும். உலகுடன் ஒத்து பயணிக்க வேண்டும். கிணற்றுத் தவளை அணுகுமுறை சரிவராது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-44)

# கிராமங்களில் தற்போதும் மொட்டுக்கே ஆதரவாம்!

கொழும்பு.பெப். 2

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிராம மட்டத்திலான வாக்கு வங்கி பலமாகவே உள்ளது. "இலங்கையின் அடுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை எமது கட்சியே வென்றெடுக்கும்" என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

வேட்பாளரை கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை. எனினும், நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்ற வெற்றி வேட்பாளரை நிறுத்தி, அதில் வெற்றியும் பெறுவோம். கிராம மட்டத்திலான வாக்கு வங்கி பலமாகவே உள்ளது. நாட்டு மக்கள் பெரிதும் மதிக்கும் தலைவர் ஒருவரே எமது கட்சித் தலைவராக இருக்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-44)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 29 • 07 • 1948



விண்ணில் 06 • 01 • 2024

கடந்த 06.01.2024 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் சின்னரெத்தினம் மகாலிங்கம்

(Dip in S & M (SL), FRICS (UK) Survey Controller (USA)

உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்.

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.02.2024) சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 05.02.2024 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோவில் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்
077 937 3857 / 077 996 5893

(CS 53804) (N-1)


# மைத்திரிக்கு எதிரான மனுவை விசாரணைக்கு எடுக்க அனுமதி

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கியமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பில் நீதிமன்றில் சாட்சியமளிக்க வேண்டும் என்று பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டோருக்கு அழைப்பாணை அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மனு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட எஸ். துரைராஜா, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (எ-இ)

# அரசாங்கம் வழங்கியது 'பொக்கெற் மணிதான்'

## அதற்கேற்ப செலவழியுங்கள் என்று வக்காலத்து வாங்குகிறார் டக்ளஸ்

அரசாங்கம் அனைவருக்கும் 'பொக்கற் மணியே' தற்பொழுது வழங்கியுள்ளது. எனவே அதனை அனைவரும் அவசியத் தேவை கருதியே செலவழிக்கவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இம்முறை அதிகளவு நிதி ஒதுக்கப்படவில்லை. குறிப்பாகப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கைச்செலவுக்கு வழங்கும் 'பொக்கற் மணிபோலவே' இம்முறை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களும் அதற்கேற்பவே தமக்கான திட்டங்களைத் தெரிவு செய்து இரு நாள்களுக்குள் வழங்க வேண்டும் - என்றார்.

பொதுமக்களால் முன்மொழியப்பட்ட திட்டங்கள் பல நிதி போதாமை காரணமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நிராகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-125)

# கரிநாள்: மட்டக்களப்பில் பேரணி

மட்டக்களப்பு, பெப். 2

இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழர்களுக்கு சுதந்திரமில்லாத நாளாக பிரகடனப்படுத்தி அன்றையதினம் வடக்கிலும் கிழக்கிலும் மாபெரும் எதிர்ப்புப் பேரணியை முன்னெடுக்கவுள்ளதாக வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி திருமதி அ. அமலநாயகி ஆகியோர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(அ-ஒ-125)

# கரிநாள் பேரணி: முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 2

இலங்கையின் 76ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பேச்சாளர் க.சுகாஷ் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்; 76 வருடங்களுக்கு முன்னர் தமிழர் தேசத்தின் இறைமையை பிரித்தானியரிடமிருந்து கையகப்படுத்திய சிங்கள - பௌத்த பேரினவாதம், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தைச் சூறையாடிய கறுப்பு நாளாகும்.

முழுத் தீவினதும் ஆட்சியதிகாரத்தை தனது கையில் வைத்துக் கொண்டு, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தும், தமிழ் இனவழிப்பை மேற்கொண்டும், தமிழர் தேசம் மீதான திட்டமிட்ட சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புகள், அதன் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பையும் சிங்கள - பௌத்த பேரினவாதம் தொடர்ந்து வருகிறது.

ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தத்தை முற்றாக நிராகரித்தமை, திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்தியமை, பொறுப்புக்கூறலை வலியுறுத்தியமை உள்ளிட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக அறிக்கையின் உள்ளடக்கமானது, இதுவரைகாலமும் சர்வதேச அரங்கில் பொறுப்புக்கூறலிலிருந்து சிறிலங்காவைப் பாதுகாத்தவர்களையும், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கடிதங்களை எழுதி, தமிழ்த் தேசிய அரசியல் அபிலாசைகளை நீக்கம் செய்யும் வகையில் பொய்யான கருத்தியலை விதைத்த தரப்புகளையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. அந்தவகையில் பெப்ரவரி 4ஆம் நாள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம் என்றுள்ளது. (அ-ஒ-100-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின் கொள்கைப் பிரகடனம்:

# நாடாளுமன்றில் 2 நாள் விவாதம்

கொழும்பு, பெப். 2

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ள அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பில் இரு நாட்கள் விவாதம் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் குறித்த விவாதம் நடைபெறும் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் பெப்ரவரி 7ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் வைபரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதுடன், அன்றைய தினம் நாடாளுமன்றத்துக்குத் தலைமைதாங்கும் ஜனாதிபதியால் மு.ப. 10.30 மணிக்கு அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் முன்வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது வாக்கெடுப்புகோர முடியாது. எனவேதான் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை எதிரணிகள் கோரின.

(அ-ஒ-44)

### பெயர் மாற்றம்

நாவற்குழியில் வசிக்கும் **ஜெயசீலன் ஜெயசீலி** ஆகிய நான் எனது பெயரை **ஜெயசீலன் நிவேரிக்கா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஜெயசீலன் நிவேரிக்கா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(es.53805) (N-1)

**ஜெயசீலன் நிவேரிக்கா**

### வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் எனும் புத்தகசாலைக்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

**077 077 6469, 077 494 9683**

### இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு

சமுத்திரா ரேடர்ஸ் நிறுவனத்தில் மோட்டர்கள், ஸ்ராட்டர்கள், மா அரைக்கும் இயந்திரம், மா வறுக்கும் இயந்திரம், போன்ற இயந்திரங்களை குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(CS 28010) V-1

தொடர்புகளுக்கு: **077 494 9683**
**021 222 2938**

### கண்ணீர் அஞ்சலி

யாழ் வணிகர் கழகத்தின் அங்கத்தவரும்.
சோபனா நகைமாளிகை உரிமையாளருமாகிய

**கார்த்திகேசு செல்லத்துரை**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**யாழ் வணிகர் கழகம்**
**இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

### வீட்டுப் பணிப்பெண் தேவை

ஒரு வயதான பெண்ணை முழு நேரம் வீட்டில் தங்கி கவனிக்க பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 844 9687, 077 493 5541**


### தவறவிடப்பட்டுள்ளது

பத்மசாமி தயாபரன் என்பவர்
ஆனைக்கோட்டைக்கும். பண்டத்தரிப்பிற்கும்
இடைப்பட்ட பிரதேசத்தில் பயணத்தின்போது
தேசிய அடையாள அட்டை (690331268V).
சாரதி அனுமதிப் பத்திரம். கிளாஸ் A,D
(B-1093181) ஆகிய ஆவணங்களுடன் கூடிய
பை தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு
கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**074 223 8234,077 240 9099**

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ராஜேஸ்வரன் மகிதரன்**



***அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தினால் 01.02.2024 பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொண்ட (லயன்) ராஜேஸ்வரன் மகிதரன் அண்ணா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன். மேலும் உங்களுடைய சேவைகள் தொடர இறைவனை பிரார்த்திக்கின்றேன்.***

(CR 41602) A-1

**வாழ்த்துபவர்:**
என்றென்றும்
அன்புத்தம்பி
லயன் பா.பரீஸ்குமார்
(குட்டி)
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்குண்டு


யாழ்ப்பாணம் சாவகச்சேரி, நூணாவில், வைரவர் கோயில் சந்தி அருகாமை A-9 வீதி இரண்டாம் காணி விற்பனைக்குண்டு.

* நிலப்பரப்பு-ஒரு பரப்பின் விலை பத்து லட்சம் (10 00 000/=) ரூபாய்.
* தரகர் தேவை இல்லை
* பார்வை நேரம் காலை 8.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை

(CS 28022) V-1

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



சிவன் கோவிலடி
புத்தூர் மேற்கு, புத்தூர்.

கடந்த 06.01.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் தம்பிப்பிள்ளை விஸ்வலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.02.2024) வெள்ளிக்கிழமை அதிகாலை 05.30 மணியளவில் எமது இல்லத்திலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 05.02.2024 திங்கட்கிழமை பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

### 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சூசைப்பிள்ளை வேதநாயகம்**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08. 02. 1942 | 02. 02. 2007 |

என்றும் எம் அன்பின் அப்பாவே!
உம்மைப் பிரிந்து இன்றுடன் பதினேழு ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
ஒவ்வொன்றும் பசுமையாக எங்கள் நெஞ்சமதில்
நிறைந்து நிற்கின்றன
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

மகன்
சுரேந்திரகுமார்
குடும்பத்தினர்
[சுரேஸ்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நடப்பது பொலிஸ் ஆட்சியே!

இலங்கையில் ஜனநாயகத்துக்குப் பதிலாகத் தற்போது பொலிஸ் ஆட்சியே நிலவுகின்றது. அடக்குமுறைகள் தலைவிரித்தாடுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

220 இலட்சம் மக்களின் வாழ்வுரிமைக்காக ஐக்கிய மக்கள் சக்தி வீதியில் இறங்கிப் போராடுகின்றது. ஆனால் எம்மீது வன்முறையைக் கட்டவிழ்த்து மிகவும் மிலேச்சத்தனமாகச் செயற்படுகின்றது அரச பயங்கரவாதம்.

நவீன இலங்கைக்கு இந்த நடைமுறை பொருந்தாது. பேச்சுச் சுதந்திரம், அரசியல் செய்யும் உரிமை, பேரணி நடத்தும் உரிமை, வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் உரிமை என்பன ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமையாகும். இதனை மதிக்காமல் ஜனநாயக ஆட்சிக்கு பதிலாக சர்வாதிகார ஆட்சிப் போக்கே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இலங்கையில் தற்போது பொலிஸ் ஆட்சியே உள்ளது. அடக்குமுறை, துன்புறுத்தல் மற்றும் தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன. மக்கள் பிரச்சினைக்கு பேச்சுமூலமே தீர்வு வழங்கப்படவேண்டும். மாறாக குண்டர் குழுக்களை ஏவிவிட்டுத் தாக்குதல் நடத்தக்கூடாது - என்றார். (அ-ஒ-44)

## செயலமர்வு

யாழ்ப்பாணத்தில் சமூக சேவைகள் திணைக்களம், மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம், ஜே.ஐ.சீ.ஏ. நிறுவனம் என்பன இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமை விழிப்புணர்வுச் செயல மர்வை நடத்தினர்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சைமிசி ரக்காசு பிரதான வளவாளராக செயற்பட்ட செய லமர்வில் யாழ். மாவட்டத்தில் பிர தேச செயலக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறாளிகள், தொழில் வாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்கள், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-125)

## சு.க.,ஐ.தே.க.,...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்றிரவு நடைபெற்ற இச்சந்திப்பில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய கூட்டணிக்கான ஆரம்பக்கட்ட பேச்சுகள் நடைபெற்றுள்ளதுடன், அடுத்துவரும் நாட்களில் கட்சிகளை தனித்தனியே சந்தித்து பேச்சு நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ச நாடு திரும்பிய பின்னர் மொட்டு கட்சியுடன் ஜனாதிபதி சந்திப்பை நடத்துவார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள ஜனாதிபதி, அதற்காக ஆதரவளிக்குமாறு தோழமைக் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## முருகன்,...

வில்லை. சிறப்பு முகாம் எனப்படும் மற்றொரு சிறையில் அடைத்தார்கள். திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் றொபேட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன், முருகன் ஆகிய நாங்கள் அனைவரும் அடைத்து வைக்கப்பட்டுள்ளோம். சிறப்பு முகாம் எனப்படுவது சிறையை விடக் கொடுமையானதாக இருக்கிறது. இங்கு நடைப்பயிற்சி செய்வதற்கோ, நண்பர்களைப் பார்ப்பதற்கோ முடியவில்லை.

சிறைவாசிகளோடு பழகுவதற்குக் கூட எந்தவித அனுமதியும் வழங்கப்படுவதில்லை. சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து பல மாதங்கள் ஒரே அறையிலேயே தங்க வைக்கப்பட்டதால் பல நோய்களுக்கு உள்ளாகியுள்ளோம். எங்களது உடல் நலத்தைச் சரி செய்ய நடைப்பயிற்சி செய்ய அனுமதி கேட்டும் இதுவரை எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை.

கடந்த மாதம் திருச்சி அரசு மருத்துவமனை சென்று ஆய்வுசெய்தபோது ரத்த அழுத்தம், கொழுப்பு, சிறுநீரகக் கல், மூட்டு வலி இருப்பதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த முகாமில் எங்களது உரிமைகளுக்கோ உணர்வுகளுக்கோ எந்த மதிப்பும் இல்லை. இதனால்தான் சாந்தன் உடல்நலக் குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேநிலை தொடர்ந்தால் நாங்கள் இங்கேயே இறப்பது உறுதி. எங்கள் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால் அதற்கு இங்குள்ள அதிகாரிகளே பொறுப்பேற்கவேண்டும். இலங்கைக்கு எம்மை அனுப்புவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால், வேறு வழியின்றி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றுள்ளது. (அ-ம)

## பொலிஸாரின்...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் இந்தத்தகவலை தெரிவித்துள்ளார்.

'அச்சுவேலிப் பொலிஸாரால் நபரொருவர் தாக்கப்பட்டதாக, மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அவரது வாக்குமூலம் நேற்று எம்மால் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்ப்பட்ட நபரொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நீதிமன்றக் கட்டளையின் பேரில் யாழ்ப்பாண மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நபரது வாக்குமூலம் நேற்றையதினம் எம்மால் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்று பதிவுசெய்யப்பட்டதுடன்விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன' என அவர் மேலும் தெரிவித்தார். (அ-ஒ-100)

## நிறைவேறியதில்...

சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றையதினம் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டம் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் போலிச்செய்திகளை கட்டுப்படுத்தும். கடந்த காலங்களில் சிலர் எதுவித ஆதாரமுமின்றி சமூக ஊடகங்களில் என்னைப்பற்றி விமர்சித்து வந்தனர். அரசாங்கம் இந்தச்சட்டத்தை அரசியலுக்குப் பயன்படுத்தாமல் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்குப் பயன்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-6)

## நிகழ்நிலைக்...

ஜனவரி 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டம், சட்டவிரோதமாகவே நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், உயர்நீதிமன்ற திருத்தங்கள் உள்வாங்கப்படவில்லை எனவும் எதிரணிகள் வலியுறுத்தின. ஜனநாயகத்துக்கு ஆபத்தான இந்தச் சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிடக்கூடாது என சிவில் அமைப்புகளும் வலியுறுத்தின.

நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அதில் சபாநாயகர் கையொப்பம் இட்டு சான்றுரைப்படுத்திய பின்னரே சட்டம் நடைமுறையாகும். இதனால்தான் சபாநாயகரிடம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சட்டமா அதிபரிடம் சபாநாயகர் ஆலோசனை கோரி இருந்தார். இந்நிலையில் சட்டத்தில் சபாநாயகர் நேற்று கையொப்பம் இட்டு சான்றுரைப்படுத்தினார். (அ-ஒ-44)

## காத்திருந்து...

இதனால் அதிகாரிகளும், பொது அமைப்புகளும் மணிக்கணக்கில் காக்க வைக்கப்படும் அவலமும் அரங்கேறியிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, உடுவில் மற்றும் கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. வேலணைப் பிரதேச செயலகத்தில் மு.ப. 11 மணிக்கு கூட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டாலும் அங்கு நண்பகல் 12.15 மணியளவிலேயே கூட்டம் ஆரம்பமானது. இதன் பின்னர் உடுவில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பி.ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டபோதும் பி.ப. 3.40 க்கே ஆரம்பமானது. இதன் பின்னர் கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும் அது பிற்போடப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நேர முகாமைத்துவம் இன்மை, ஒழுங்கான திட்டமிடல் இன்மையால் அதிகாரிகளின் நேரமும், பொது அமைப்புகளின் நேரமும் வீணடிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-125)

## குடல்...

நேற்று உயிரிழந்துள்ளார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் குடலில் ஏற்பட்ட கிருமித் தொற்றுக் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-125)

## ஐஸ்...

மன்னார், பேசாலையைச் சேர்ந்த 22 வயதான இளைஞனே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மூளை நரம்பு வெடித்தமை காரணமாகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளான்.

உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்தியாமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-5)

## விபத்தில்...

சுழிபுரத்தைச் சேர்ந்த செல்வரட்ணம் பாலச்சந்திரன் (வயது - 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்தவாரம் மோட்டார் வாகனத்தில் பயணித்த அவர் நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் ஒருவார காலமாக சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை அவர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்குள்ளான நிலையில், நிமோனியாக் காய்ச்சல் மூலம் ஏற்பட்ட கிருமித் தொற்று பரவிய நிலையில் உயிரிழப்பு ஏற்பட்டமை தெரியவந்துள்ளது. (அ-ஒ-125)

## சைக்கிளில்...

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையில் கழுத்து எலும்பு முறிந்தமையே உயிரிழப்புக்குக் காரணம் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ஒ-125-26)

## விபத்தில் சிக்கியவர்...

போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அவர் உயிரிழந்தார். அவரது இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26-100)

## சுகாதாரத்...

கோரியே தொழிற்சங்கங்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக வடக்கிலும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக வவுனியாவில் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வருகை தந்த நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுத்துவக்கு வெடித்து பொலிஸ் காயம்

கிளிநொச்சி, பெப். 2

தர்மபுரம் பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர் சந்தேகநபரை கைது செய்ய துரத்தியபோது கட்டுத்துவக்கு வெடித்து காயமடைந்துள்ளார்.

புளியம்பொக்கணை, கோரமோட்டையில் சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அங்கு பொலிஸார் விரைந்தனர். சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்ய முற்பட்டவேளை, அவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார். அவரைக் கைது செய்யும் நோக்கில் பொலிஸார் துரத்திச் சென்றனர். அப்போது மிருக வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுதுவககு வெடித்ததில் பொலிஸ் அலுவலர் படுகாயம் அடைந்து தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ஒ-113)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 129 4999**
**076 788 0591**

## காணி விற்பனைக்கு

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பண்ணாகம் கிராமத்தில் 15 பரப்பு தென்னந்தோட்டம் (103 மரம்) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **077 326 8914**

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் 3 அறைகளுடன் கூடிய வீட்டின் 1 ஆம் மாடி வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: **077 378 7380**
**077 735 3720**

(s-28005) (N-1)

## முகாமையாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் Fancy Shop ற்கு குறைந்தது 3 வருட வேலை முன் அனுபவம் உள்ள Sale Promotion முகாமையாளர் தேவை.

Call - Whatsup CV
**070 616 8869**

## காணி, வீடு, மூன்று கடைத்தொகுதி விற்பனைக்கு

இல-17 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த 3 1/4 பரப்பு காணி, வீடு, 3 மூன்று கடைத்தொகுதி என்பவற்றுடன் 13 அறைகளுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**077 993 4169, 077 071 1217**

## காணி விற்பனைக்கு

இராச வீதி பிரதான முகப்புடன் 03 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**

**077 814 7389,**
**077 986 5457.**

## INFORMATION TECHNOLOGY PARK

ITP

*Under the purview of the*
*Ministry of Investment Promotion*

MPCS Buliding
127,K.K.S.Road, Jaffna

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

### இடை வரவு விரிவுரையாளர்கள் தேவை

தகவல் தொழில் நுட்பப்பூங்காவின் கல்விச் செயற்பாடுகளினை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம். அதன் பொருட்டு கணினித்துறை சார்ந்த பாடங்களை வார/இறுதி நாட்களில் போதிப்பதற்கு இடை வரவு விரிவுரையாளர்கள் வேண்டப்படுகின்றார்கள். தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் 16.02.2024 (Friday)க்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகள் தம்மால் விரிவுரையாற்றக் கூடிய கணினித்துறை சார்ந்த பாடங்கள் ஆகியவை உள்ளடங்கலாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்க மூலையில் (இடை வரவு விரிவுரையாளருக்கான விண்ணப்பம்) என குறிப்பிடல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**அலுவலக பொறுப்பதிகாரி,**
**தகவல் தொழில் நுட்பப் பூங்கா,**
**127,K.K.S வீதி,**
**யாழ்ப்பாணம்.**

- விண்ணப்பதாரிகள் கணினித்துறை சார்ந்த பட்டங்களை அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தகைமைகளையும் போதிய கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- நேர்முகப்பரீட்சை மூலம் இடைவரவு விரிவுரையாளர் தேர்வு நடைபெறும் என்பதுடன் விரிவுரையாற்றும் மணித்தியாலங்களின் அடிப்படையில் (ரூ.750 / ரூ.1000) கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

## பதினோராண்டில் தொடரும் நினைவலைகள்



பிறப்பு 05 . 10 . 1975

இறப்பு 02 . 02 . 2013

### அமரர் தீ.சசீந்தினி

பிறப்பு இல்லாதொரு
நாளொன்றும் இல்லை!
பிறப்பு உண்டேதனில் ..
இறப்பும் பிறக்குமே!
பாசத்தின் பிணைப்பதனில் பிரிவுகள் தொல்லை!
பிரிவுகள் தந்திட்ட நினைவுகள் சுகமே!
ஆண்டொன்று போனால்
ஆண்டொன்று வருமே! சசி
நீ எமைப்பிரிந்து சென்று
நாட்களும் நீளுதே!!
நெஞ்சமதில் ஞாபகங்களோ
நிறைந்தேயிருகையில்..
உனை மலர்தாவி எந்நாளும்
மனதிருத்திப் பார்க்கின்றோம்!
நாம் வாழும் காலம்வரை
எம் இதயங்களிலும் நிலைத்தேயிருந்திடுவாய்!!
இறையடியில் உன் ஆத்மா
தொடர்ந்தும் சாந்தி பெற வேண்டிநிற்கின்றோம்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

**புளியங்கூடல் வடக்கு,**
**ஊர்காவற்றுறை.**

## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD VICTORY MUS

### கணித விஞ்ஞானப் பிரிவுகள்
### 2024 Revision Classes
### Tamil & English Medium

**Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

| | |
|---|---|
| Physics | R.Kumaran, R. Kugen |
| Chemistry | Dias, K.T.Shivakumar |
| Biology | N.T. Gajenthiran |
| Com.Maths | K. Ainharan, V. Khariharan |

**ஆரம்பம் :- 05.02.2024 (திங்கட்கிழமை)**
**நேரம் :- 12.00 pm**

**அனுமதிகள் இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளன**

**Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்துகொள்ள முடியும்.**

**மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:**

**021 221 6690, 077 336 4030, 075 836 4055**
**அலுவலக நேரம் :- 8.00am - 4.30pm**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org